9287

கடவுள் துணை

அதிவீரராமன்பட்டினம்

ஜீவரத்தின கவி இராஜரின் குமாரர்

செய்யிது முகம்மது அண்ணாவியார்

இயற்றியது

சீட்டுக் கவிதை.

வெளியிடுவோர்:

அண்ணாவியார் பதிப்பகம்

ஹாஜி க. செ. செய்யிது முகம்மது அண்ணாவியார்

அண்ணாவியார் தெரு, அதிராம்பட்டினம்.

(தஞ்சாவூர் மாவட்டம்)

இரண்டாம் பதிப்பு: 1984.

விலை ரூ. 2—00.

ஹிஜ்ரி 1404,

7-ம் பக்கம்

பிழை :	திருத்தம் :	
பூஜை	பூஜை	3-வது வரி
பூஜை	பூஜை	9-வது வரி

கடவுள் துணை

சீட்டுக் கவிதை

இஃது

அதிவீரராமன்பட்டினம்

ஜீவரத்தினகவிராஜரின் குமாரர்

செய்யிது முகம்மது அண்ணாவியார் இயற்றியது

பூவிய விலக்கண மிலக்யமொடு தொன்னூல்கள் - பொருளிற்பிற சண்டவாக்கி - புகழ்பெற்ற அகளங்க ஜெயசிங்க மென வந்தபுருஷ ரத்தினத்தின் யோக்யம் புனரியொரு வணுவெனை றகெணி தசாஸ்திர கிரண பொற்பு மேலிட்ட தீபம் - பொன்மாது குடியதா யென்றுரும் வளர்கின்ற புயவீரியப் பிரதாபம்.

சீவலம் பெரியதமிழ் நேருநிறை யறிவுற்ற செம்மல் களின முடியிரத்னம் திரையுற்ற பரவைசூழ திவீர ராமநகர் ஜெயமுற்ற ஜீவரத்னஞ் - செய்தவ மிகுந்து நிஜ மெய்ருப வுருவெனுஞ் சேயனென வருகுரேந்திரன். சிந்தாத பைந் தமிழ்ச் சந்திரோதயப் பிரபல செய்யிது முகம்மதேந்திரன்

நாவுறும் புகழுடன்றேச ராசேந்திரர் புகழ் ரஞ்சுத சௌந்திர கிரணன் நயன்பன் புசவ்வாயி விஜயரெகுநாத துரைசாமி கோபாலகர்ணன் நங்கை தங்கத்தாயி யிங்கிர்தத் துடனின்ற ரத்னமுடியுற்ற குமுறு நன்னயமிலாம் லெதி ரொன்னலர்க் கிடியேறு ராமனை நிகர்க்கு நிபுணு.

சீட்டுக் கவிதை

தேவையுறு பாவணர் கெணிதர றிவாளர்தன் றிரமை கண்ட ருஞதாரா சிந்தைமகிழ் மதிமந்திரி வேலாயுதம் பிள்ளை செஞ்சொற் கிசைந்த தீரா தினந்தொரு முகந்திடு மனந்தப் பிள்ளை தளசேகரப் பூபாலனே திறைராஜர் சௌவாயி விஜைய ரெகுநாத வாளோஜி கிஷ்ண கோபாலனே.

ஜெகமுழுதுமே புகழிலக்கணக் கடன் மடை திரந் தொழுகு மத குஞ்சரந் திவ்ய ரெம்பியக் கருணை மதுரசுசிகரவமுர்த செந்தமிழ்ச் சுவை ரஞ்சிதஞ் சினத்துத்தரஞ் சொலருரத்தைக் கிழித்து ஜெகத்திற் புகழ்ப்றபல்யஞ் செப்பரிய மணி ஜீவரத்ன கவிராஜனருள் செம்மலென வந்த துல்யன்

சகல கலையுணர் செய்யிது முகம்மதுக் கவிராஜன் சற்குணனெழுது நிருபஞ் ஜெகமெங்கு நிலைகொண்ட ஜெய சிங்கமென வந்த சபை சங்கி மகிழ்விவேகன். தந்திரி மதி மந்திரியென வந்த புகழ்ந்திரகுல சம்பிரம சவுந்தரீகா சவ்வாயி விஜயவாளோஜி கோபாலதுரை சற்குணன் மகிழ்ந்து காண்க: அகமகிழ் உன் ஜனன தற்கால கிரக நிலை யதினுளதிஜா பலனையும் அவரவர் பொசிப்பிற் பலத்தின் சமஸ்தமு மனுகூல காலபலனும்.

அஷ்டவற்கங்கணித சாஸ்திர விதிப்படி யறிந்துரைந் தாய்ந்து மினிய. அதியோக முன் பெரியதிஷ்ட ஜாதகமதை யென் னன்புவைத்தே கணித்து வெகுநாள்களான தாலுனது

திருமுக சமுக மேவியிந்நூல் படித்துன் வெகுமதிகள் பெற்றெனது ஊர். வருகவேணுமென மேன்மையுடனே வருகிறேம் விசுவாசமாகவே யுனது புகழ் வளரவே மேங்காரு பாரு செய்யும் வேலாயுதேந்திரனுக் கியலுரை கொடுத்தெனை விருப்புடனப்புவாயே.

விருத்தம்

அதிவீரராமன்பட்டினம்

ஜீவரத்ன கவிஇராஜரின் மருமகரான

சொர்னகவி நெய்னுமுஹம்மது பாவா புலவர்

அவர்களியற்றிய விருத்தம்.

(கணக்குகள்.)

1 கஞ்சமலர் மாதுவளர் செல்லிமா நகரிலொரு
  கன்னிகையுடன் கூடியே
கலசமுலை தழுவியிதழ் பரிகி மொழிகுளறிவெகு
  கலவிங்கலை விளையாடயிற்

2. பஞ்சவட மாமணிகளன் றுதிர்ந்தன வொளிர்
  பாயதனிலைந்தி லொன்று
பஞ்சணையின் மூன்றிலொன்ருகி யெழில்தங்கிய
  பளிக்கறையிலாறிலொன்று

விருத்தம்

3. கொஞ்சு கணவன் கையிற் பத்திலொன்றங்கவள்
கொழுங்கரத் தெட்டிலொன்று
கோர்வைதனி லெழுபத்து ரெண்டு மற்றவை யெல்லாங்
கூடுவது யெவ்வகை யென

4. அஞ்சிரு ளஞ்சிரு ளஞ்சிரு ளொன்றிரு
ளாறுமிக் கடிகைதனிலே
ஆய்ந்தெடுத்தொரு கோர்வை செய்தவர் கணக்காள
ராமென வகுக்கலாமே

1. பேரேறு செங்கமல மாமாது வளர்கின்ற
பெட் பீனுயருஞ் செல்லியூர்
பேதகமிலாத வளநாடு சூழாகவே
பிறபல்யமா விளங்கும

2. ஏரியொன்றுக்கு மடைநாலு நிறைகின்றநீர்
எப்படி யிறங்கும் வகைகேள்
எழில்தங்கு முதல்மடைக்கோர் சாமமறு மடை
யிரண்டு சாமத்தின் வடிவாஞ்

3. சீருலவு மூன்றுமடைக்கு முச்சாம முயர்
செய்யமடை நால்சாமமாஞ்
சேகரமதானமடை நாலுமொன்றுகவே
செப்பமுற நீர் வடிகிலோ

4. தாருல விடுங்கணக் கெவ்வளவ தாகின்ற
சாம மதெனக் குறைசெய்வீர்
சங்கைசெறி மூவாறு வென் புரவியின்கால்
தனக்கீயு மாவீரரே

விருத்தம்

அலைதங்கும் வாரிசூழுல கெங்குமே புகழ
மன்புசெறி மறையின் மாது
ஆதிக்க மெங்நாளுமே பெருகி வளர்கின்ற
அதிவீரராம நகரில்

மலையருவி போட விண்ணள விடையுயர்ந்தேக
மஞ்சடை கிடந்துலாவும்
மலர் மாதுவு முக்கணித் தேறலுந் துளிபாய
வளரு பேரடவி தனிலே

கலையொன் றெழுந்து மொரு நாளினுக் கீரைந்து
காதங் கடக்க வொரு நாய்
கருதிய தெழுந்து பின்னேகி யொருநாளி லொரு
காதந் துலைத்து மறுநாள்

துலை கண்டு நாட்கு நாளதிக மொரு காதந்
துலைத்தது பிடிக்குளாகத்
தங்கமுறு வாரங்கள் மாசத்திலுந் தேர்ந்து
சொல்லுவர் கணக் காளரே

மண்டுலவு சோலை மதுவுண்டு நெல் வளந்தேற
மடைவாளையே குதிக்க
மரைமாது தனமாது கலைமாது தினமருவி
வளர் செல்லிமா நகரிலே

எண்டிசை களும் புகழும் வர்த்தக ஞெருத்தனுக்
கிருசேய் பிறந்தவர் கடாம
எதிர்த்து மவர் பாகம் பிரிக்க வென்றெண்ணியே
யிகலி னுற்றது கேளுமே

விருத்தம்

வெண்டரள நூற்றி லொரு கோர்வை யுளதா மது
விளங்கு நற் பிற காசமாம்
விலை யொன்றினுக் கொன் று வொவ்வொரு
பொனதிகமாம்
வீற்றிடாதே பிறித்து

கண்ட துகை பொன்பாதி வெண்டரளமும் பாதி
கடைவீதி தனி லேகியே
கால் தலை யுடைத்து மடிதொட்டதை விலக்குவர்
கணக்கர் கோடாலி தாமே.

தேச தேசம் புகழ மாமாது நின் றுலவு
செல்லிமா நகரில் வாழ்வோர்
தீவாந்திரத் தானை வங்க முன்றேற்றியவர்
சிந்தை மகிழுற்று வரவே

ஓசை பெற முன்வந்த கப்பட் டவங்கப் பின்
னுற்ற கப்பற் காரர் பால்
ஓதவவர் கப்பலுக் கேற்று மதியிற் பாதி
யுற்றவருகந் தேற்றியே

வாசமுற வோடிவர வங்கந் தவங்கப் பின்
வந்த வர்க் கோத வவர்கள்
வங்க மதிலேற்று மதியிற் பாதியேற்றினர்
வரிசை பெற மூ வங்கமும்

நேசமுற வேற்றுமதி சரியா யிருந்து முன்
னேற்று மதி நேரறிந்து
நீதமுற வோதுவர் கணக்கினை க்ஷத்ரவா
னென்றனர் கவிப் புலவரே.. (27) (13-8-6)

விருத்தம்.

சீலவளருஞ் செல்லிமா நகரிலோர் மனைச்
சுவரடியிலோர் மூலையில்
சிறுதெலி யிறங்க வொரு பூஜைகண்டவை சிலை
சிதைக்க மற்றவை யேறியே

மேலுமொரு மூலைதனில் ரெட்டித் திரங்கிட
மேன்மேலுங் கடித் துதறவே
மிச்சமுள தோடியே மூன்று பங்காகியொரு
மூலை மேலா லிறங்க

கோலியே வரும் பூஜை சில நறுக்கச் சில
குதித்தோடி நாலு பங்காய்
கொண்டுமொரு மூலைவரை யாவையும் நறுக்கியே
கொண்டாடி நின்றுடிரும்

மூலை நாலுக்கு மெலியாரடா சரியென்று
மோசமுன்னு ளுரைத்தான்
முற்றிய கணக்கினுற்பத்தி நாற்பத்தொரு
மொழிக்குளாகப் பகர்வரே, (6) (41)

செங்கமல மாதுவளர் செல்லிமா நகரிலொரு
தெய்வ ரம்பையிலதிகமாங்
தேசி வளர் விலைமாதினைக் கண்டுனக் கருதல்
செப்படி யென கூறினேன்

பங்கு ரெண்டுக் கொன்று அதிகமாம் பதினாறு
பங்குவரை யொன்றதிகமாம்
பதினேழு பங்கினிற் சரியா யிலங்கிடும்
பசும் பொன்னெனக் கழித்தால்

விருத்தம்

கொங்கைக் கிரண்டுமாக் கோடி வெண்டரளமுங்
கோர்வை வடமும் மணிந்து
கொழுங்கரத் தெண்ணைந்து ரெட்டியோராயிரங்
கொள்பொனின் கடையமிட்டு

இங்கிர்தஞ் சேர் கலவி யெட்டெட்டி னுடைந்து
யீரறு தினஞ் சேறுவேன்
யென்றுறைத் தனளிந்த நற்கணக்கின்றுளக
யியம்புவர் கணக்காளரே. (1081081)

வாசமுறு செல்லி யூருக்கினிய கோட்டைதன்
வாசல் நாலுள்ள ததிலோர்
வணிகனுங் காவலோர்க் கோர் பொன்கொடுத்
துளாய்
வாங்கி ரெட்டித்து விற்று

ஓசை பெறவோர் பொன்கொடுத்து மறுவாசலுக்
கோர் பொன் கொடுத்துள்ளாகி
ஒன்று மூன்ருக விற்று வரவோர் பொன்
னுகந்தருளி மறு வாயலில்

நேசமொரு பொன்னருளி யொன்று நாலாகி
நீண்ட பொன்னருளி மறுவாய்
நீதி முன்போலருளி யொன்றஞ் சதாகியே
நேரொரு பென்னீந்து வெளியாய்

வீசிய கையேது மிலதாகினுன் முன்கொடு பொன்
வியரம தெனக் கருளுவீர்
வினை வழியதாகவே யறு நாலு மாக்காணி
வினைவு செய்திடு வீரரே

விருத்தம்

வாசமுறு செல்லிங்கர் வர்த்தகனி னிக்கினிய
மைந்த ரொருபது மருளராம்
வரவழைத் தொவ்வொரு வருக்கொரு பொனதிகமாய்
மனமுகந்தி னிதினருளி

ஓசை பெறுலாபமுத லொவ்வொரு வரிருபதுபொ
னுற்றருளு மென்றுரை செய்தான்
உண்மைகொண்டவர் முளகதொரு விலைப்படிமுத
லுள்ளது வெல்லாம் வாங்கியே

காசுயரவே சௌதமும் புருசமொருவர் போற்
கண்டித்து விலை விற்றனர்
கணக்குறு பொன்னொரு வருக்கிருவது குறைந்திட
கைவசமதாய் வந்தனர்

கோசமறவே பத்து மஞ்சகரலுங் கால்கள்
கொள் சௌதமும் புருஷமுங்
கூறுபத் தொன்பது பின் ரெவ்வென்று குறையவே
கொண்டு யிற்றன ரொழுங்கே

(வேறு)

திருத்தரு மெனது மனையிடம் புகுந்து
தீயினைக் கொளுத்தி விட்டவனர்
செப்பு மென்றவை யோர்க்குரைத் திடவவையோர்
செப்பினர் தீக்கரத்தொருவன்

சிரத்தினிற் சலங்கை மாலையிட்டிருந்தாஞ்
செவியினிற் றெங்க லிட்டிருந்தான்
றேசமிலவன் போல் காண்பதற்கரிது
திருக்குளநயன முற்றிருந்தான்

விருத்தம்

கரத்தினிற் சிலம்பை யெடுத்தணிந்திருந்தான்
கழுத்தினிற் கடுக்கனிட்டிருந்தான்
கண்டநம் பேருர் கொளுத்தியென்றுரைத்தாற்
காண்பதெற் கெங்கெனக்கவல

உரத்தினில் தியாகராஜ னன்னகத்தி
லுகுந்துற க்குடியிருப்பவனென்
ருேதினோர் தேடிவந்தனன் பொருள்க
ளுளது நீ தந்தருள்புரியே

(வெண்பா)

இப்போதனுப்பு மிராஜர் முதலி யாவருக்கும்
அற்புதமா மற்றவைக்கு மாதியுமாம்—நற்புகழ்சேர்
வண்டாடுந் தொங்கலணி மாதுவளர் தியாகேந்திரா
ரெண்டே யொருமாப் பணம்.

(உப்பு)

விடுகதைக் கவி.

ஓரிடத்தில் மூவர்களு மொன்ருய் நிற்பா
ரொருவரை விட்டொருவரவருறுதி செய்யார்
காரியமெல்லாமவரால்க் காணலாகும்
கதிரவனைக் கண்டிட்டாற் களங்கமாவார்
சீருறவே காரகற்றுங் காலானில்லார்
தேசமெங்கு மிவரை விட்டாற் சிறப்போறில்லை
பாரிலுள்ளோர் தன்னகத்தை விளக்குஞ் சொர்ணப்
பாவலவன் செந்தமிழ்க்குப் பயன்ருண் சொல்லே

(விளக்கு)

விடுகதைக் கவி.

கொலை பொருந்துந் தொழிலுடையோன் வேடனல்லக்
கோணி நடைபுரிந்தேகு முடவனல்ல
மலைசெவிகள் பதியினுள்ளோர் துறவோரல்ல
மகாஜனங்கள் நடுங்கவைக்கும் படைகளல்ல
விலைமதியா ரத்னமுள்ளோர் செட்டியல்ல
மெல்லடிவைத்தாடி வருந் தாசியல்ல
சிலைநுதலாயரவ வல்கு லிலங்குமாதே
திறமையுடன் சொர்னகவி சொற்செய்தானே
(அரவம் — பாம்பு)

தாயுடன் பேர் விளங்கரிது தன்பேர் சொல்வார்
தலைகள்கிள்ளி யாய்ந்தெடுப்பார் மச்சமல்ல
காயமடிக் கடிகுளிப்பார் மறையோரல்ல
கட்டுண்டு கால்தளைவார் திருடரல்ல
நேயமுடனீரணிவார் மடிக்குள்ளாவார்
நிதியோரு மதிமோகத்துடனே காண்பார்
தூயவலங்கிர்தக்காரி தும்பை சூடி
துலங்கிடவே சொர்னகவி சொன்னேன் மாதே
(தும்பை வெற்றிலை)

தாங்காமல் வெட்டுமென்பார் திருடரல்ல
சட்டையுரித்துடல் காட்டுஞ் சற்பமல்ல
பாங்காக சீவி முடிப்பார் சிறு பெண்ணல்ல
பலபேரோ டுகந்திருப்பார் தாசியல்ல
தீங்கில்லாப் புகழுடையோர் தவத்தோரல்ல
சேர்ந்திருக்கும நலமிடரைச் சிறப்புச் செய்வார்
மாங்குயிலே நீன் பாக்காத் தேசமுண்டோ
மன்னனவன் சொர்னகவி வழுத்தினேனே
(பாக்கு)

விடுகதைக் கவி

கோடான கோடி பொருளுள்ள சீமான்
கொடுவென்றாற் கெடுக்கறியா யெடுத்தாக்கேளான்
ஆடாமலடுத்தவரைத் தாங்கிக் கொள்வான்
அடித்துலைத்துச் சிலபேரைப் பறித்துக்கொள்வான்
நாடாளும வேந்தர் முதலெவர் வந்தாலும்
நலமிட ரென்றுளத்தறியான் மூடனல்ல
நீடாழி சூழுலகம் போற்றுமாதே
நிருபர்மகிழ் சொர்னகவி நிகழ்த்தல் காணே
(ஆழி கடல்)

ஆடிவருங் கனவேகங் கொண்டுதாவி
யடர்ந்தேரும போர்முகத்தில் திகிரியல்ல
நீடுமாமுடியிலங்கச் சிங்காரித்து
நிறைந்த பணிபூண்டு வரும் பெண்களல்ல
மோடியுறுங் கிரீடமுடி ராஜ ராஜர்
மோகமுடன் விலைமதிக்கக் கூடாதென்பார்
கோடை முகிலென்ன வண்ணஞ்சிந்து வென்பார்க்
கூறுகின்ற சொர்னகவி கூறினேனே.
(கோடை) குதிரை)

தப்பாமல் சாஸ்திரங்களறிந்து சொல்லுஞ்
சகலகலை நூலுணர்ந்து படித்தோரல்ல
அப்பாலே நடந்தவர்க்குப் பாதைகாட்டும்
அதற்காகச் சமபளத்திற்கிசைந்தோரல்ல
நற்பாகத்திரண்டளவிலாத கூட்டம்
நாடோறுங் குறைவதில்லா நளினக்காரர்
செப்பாகப் பணைத்துப் பம்மித்த கொங்கை
தெள்ளமுர்த சொர்னகவி சொற் செய்தானே
(பம்) நட்சத்திரம்) விண்மீன்)

விடுகதைக் கவி

ஆணுமல்ல பெண்ணுமல்ல அலியுமல்ல
யாவர்களு மவரை விட்டாலலைந்து போவார்
காணரிய தேசமெல்லாங் காணலாகுங்
கட்டுண்டடி பட்டாலுங் கனமேயுள்ளோர்
தாணுவாக் கோட்டைக்குள் ளிருக்கும் ராஜர்
தங்களுக்கு மேன்மையுள்ளோர் பலபேதத்தோர்
நாணமுறு மிள மயிலே கதையைத்தான் சொல்
நாகரீகஞ் சொர்ணகவி நடத்தினனே

(நாணம்) நெல்)

வாய்கை முணு முணுத்திருப்பார் பித்தரல்ல
மன்னருடன் கலந்திருப்பார் வலியோரல்ல
மோகமுடன் யாவரையுந் தழுவிக்கொள்வார்
முடியசைத்து யெவைகளினும் வசனஞ் செய்வார்
பாகமுடனல மிடரைக் கலந்து கொள்ளும்
யலதையு மொனருய்க் காணு மயானியல்ல
ஈகையில்லாரிடம் புகுதர்க் கமலமாதே
யேந்தலெனுஞ் சொர்னகவி யிசைத்தல் காணே

(ஈ)

கையிலெடுத்தாற் குதிக்குங் குழந்தையல்லக்
கணக்கில்லாப் பொருள்கொடுக்குந் தியாகியல்ல
துய்யகலை நூல் விளைக்கும் பெரியோரல்ல
தொட்டவற்கே பெயர் கொடுக்குந் தெய்வமல்ல
செய்தொழிலுக்குறுதி செய்யும் பணங்காசல்ல
சிறுவர்களை வருத்திவைக்கும் வாத்தியல்ல
தையலரே சொர்னகவி மகிழ்ந்தன் பாகத்
தானெழுதுஞ் செந்தமிழ்க்குப் பயன்றுன் சொல்லே

(எழுத்தாணி)

விடுகதைக் கவி.

கூட்டிலே யடைத்திருக்கும் பறவையல்ல
கூட்டமிட்டு விளையாடுங் குழந்தையல்ல
நாட்டரசருகந்திருப்பார் நிதியமல்ல
நடுங்கிடக்கூன் குரல் விளைக்குந் திருடரல்ல
ஆட்டிவைக்கும் பயங்கொடுக்குஞ் சற்பமல்ல
ஆதனவாளுயர்ந்தோங்கு மவர் மேலீச்சை
தாட்டிகைவான் சொர்னகவி மகிழ்ந்தன் பாகத்
தானெழுதுஞ் செந்தமிழ்க்குப் பயன்ருண் சொல்லே
(வாள்)

கொம்புவாலசைத்து வரும் மாடாடல்ல
குமுறியண்ட மீதேறும் வாணமல்ல
அம்பலத்திற் சண்டை செய்யும் வயிரியல்ல
அடங்கிருங்கால் வேகமுள்ள குதிரையல்ல
தெம்பொடு கட்டுண்டலைவார் திருடரல்ல
சீர்பெருகுஞ் சிறப்புடையோர் தவத்தோரல்ல
நம்பரசர் பெயர் விளங்குந் திருவாய்மாதே
நாடுசொர்னகவி கதைக்குப் பயன்ருன சொல்லே
(பட்டம்)

கட்டுண்டடடி படுவார் திருடரல்ல
கட்டவிழ்த்து விரித்தெடுப்பார் பிடவையல்ல
திட்டமுடன் முள்பினனுபோகங்காட்டித்
திரண்டவளக் ககற்றிவைக்குஞ் சபையோரல்ல
செட்டுறுவோர் கம்பர்குடி யானோரல்ல
சேகரமாய்க் கணக்கறைவார் கணக்கோரல்ல
வட்டமுலை கயறுவர முகமிந்தாக்கும்
மாதரசே சொர்னகவி வழுத்தினேனே
(முகம்) ஏடு)

ஜீவரத்தின கவிராஜர் – குமாரர்
செய்யிது முகம்மது அண்ணுவியார் இயற்றிய
விடுகதை

விடுகதைக் கவி.

கங்கைநதிப் புனல் முழுகிக் கரையிலேறிக்
கதிரவனைக் கண்டுடலங்காய்ந்து வற்றிப்
பொங்கு கடற் சீனியுண்டு ரிஷபமேறிப்
பூலோகஞ் சிறக்கவரும் அரனுமல்ல
செங்கருடனைந்து வரு மாலுமல்லச்
சிறந்தவன்ன மேலிருப்பார் பிர்மாவல்ல
இங்கிதனை யாராய்து சொன்ன பேர்கள்
தியாக முனிக்கிணையாக வியம்பலாமே.

(இங்கி) கருவாடு)

நவரத்தின கவி காதிறு முகிய்யத்தீன்
அண்ணாவியார் இயற்றிய

விடுகதை.

கைகால் வாயுண்டு ஜீவ செந்துமல்ல
கனபடைகளுண்டு புவியரசரல்ல
மெய்சாந்து வளையணிவார் பெண்களல்ல
விருமபி வந்தோர்க் கிடங்கொடுப்பார் தாசியல்ல
செய்யதிரு மாதிருப்பாள் மரையுமல்ல
சேர்ந்தநிலை விட்டகலார் மரங்களல்ல
வையகத்தோரகந்தனையே விளங்கவைக்கும்
மன்னனவ ரத்னகவி வழுத்தினேனே

(அகம்) வீடு)

விடுகதைக் கவி.

நீராடி யமுர்தமுன்பார் மனுடரல்ல
நெஞ்சிருக்குமோர் பொருளை நினைக்கமாட்டார்
கூரான கண்களுண்டு பார்க்கமாட்டார்
குவலயத்தோர்க் கவரைவிட்டரல் மானமில்லை
நேரான கால்களுண்டு நடக்கமாட்டார்
நீணிலத்தில் விலைப்படுவா ரடிமையல்ல
ஆராய்ந்து கலையோதும் பெண்ணே கேளா
யன்பனவ ரத்னகவி யருள்செய்தேனே

(கலை) புடவை)

சூரியனுக் குரித்தான தூதர்போலே
துரிதமுடன் கூப்பிடுவார் தேவரல்ல
வீரியமாய்க் கத்தி கட்டிவேகமாக
விகட மொடுபோர் பொருவா ரரசரல்ல
பாருழுதுவயர் வளப்பார் மனுட ரல்ல
பலவண்ணம் பொலிந்திருக்கும் பணிகளல்ல
வாரணத் தோரரசர் தினம் புகழுகின்ற
மன்னனவ ரத்னகவி வழுத்தினேனே

(வாரீணம்) சேவல்)

விடுகதைக் கவி.

கோவென்பா நெறியுள்ள வரசரல்ல
குவலயத்தோர்க் கவராலே ககம் பெண்ணல்ல
காவல்கட்டுத் தளையிடுவார் கள்ளரல்ல
கருணையுடன் விலைப்படுவா ரடிமையல்ல
ஞாவியிவரளித்த பொருள் பலபேற்குண்டு
தாரணியில் விளங்குங் கூத்தாடியல்ல
பூவுலகோர் புகழ் புண்யனுடதம்பை
பூபன் முத்துசாமி யிதை புகலுவாயே

(மாடு)

வெண்பா

நாகக்கால் நீங்க விடை நாகனிகள் முன்னுங்கு
நாகக்கை யோடிடவே நாடோறும்—மோகமுடன்
பொங்கும் பாண்டத்தைப் பொசிக்காம லெட்டியென்ருள்
வெங்கிட கிஷ்ணன் மாலால் மின்-

(இதுவுமது)

இங்கிதஞ்சேர் மானே இயம்புகிறேனோர் பூண்டை
தங்கையொடு வாகனந்தன் பீடமுஞ்—செய்துங்கேள்
ஒருமாத்தோல் தன்னை யுடுத்து பித்தன் சார்பு
அருணகிரியான கந்தனில்

முற்றிற்று.

இக் கவிதைகளின் அருத்த பாகக் கணக்குகளையும், விடுகதையின் அருத்த பாகத்தையும், இச் செய்யுள்களைச் செய்த மகாநுவின்னால் செய்யுள் நடையில் விடுவித்துயிருக்கின்றனர். அதனை புத்திமான்களறிக.

இந்த மகாத்மாவின் பாடல்கள் எம்மால் கிடைத்தளவு அச்சிடலாயிற்று.

ஏ பி சி பிரிண்டர்ஸ், அதிராம்பட்டினம்.

ஏ. பி. சி. பிரிண்டர்ஸ்,
அதிராம்பட்டினம்.